# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 10 | பாடம் : சைவநெறி I, II | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :.......................................................................................................

### பகுதி I

❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01) விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம்
(01) சௌரம் (02) காணாபத்தியம் (03) சைவம் (04) கௌமாரம்

02) பஞ்சகிருத்தியங்களில் திரோபவம் குறிப்பது.
(01) படைத்தல் (02) அருளல் (03) காத்தல் (04) மறைத்தல்

03) உயிர்களிடத்தில் அன்பு வைப்பவன் தெய்வநிலை எய்திவிடுகிறான் எனக் கூறுபவர்.
(01) திருமூலர் (02) அருணகிரிநாதர் (03) ஆறுமுகநாவலர் (04) சேக்கிழார்

04) படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில் என்ற திருமுறை இடம் பெறுவது.
(01) 8ம் திருமுறை (02) 9ம் திருமுறை (03) 12ம் திருமுறை (04) 10ம் திருமுறை

05) சத்திய மேவ ஜயதே………….. என்ற மகா வாக்கியம் இடம் பெறும் நூல்.
(01) வேதம் (02) ஆகமம் (03) உபநிடதம் (04) திருமந்திரம்

06) சூரிய உதயம் முதல் அடுத்த நாள் சூரிய உதயம் வரையிலான காலத்தினை ஒரு நாளாக கொள்பவர்கள்.
(01) இஸ்லாமியர்கள் (02) சைவர்கள் (03) கிறிஸ்தவர்கள் (04) பௌத்தர்கள்

07) அட்டாங்க யோகத்தில் இரண்டு.
(01) இரக்கம், தவம் (02) இயமம், தவம் (03) இயமம், நியமம் (04) நியமம், இரக்கம்

08) தவம் செய்தலுக்கு நிகரானதாக போற்றப்படுது.
(01) இரக்கம் காட்டுதல் (02) ஈகை செய்தல் (03) ஒப்புரவு செய்தல் (04) அன்ப செலுத்துதல்

09) இறைவன் குணங்கள் யாவற்றையும் கடந்தவர் என்பதால் வழங்கப்படும் பெயர்.
(01) குணாநிதி (02) சச்சிதானந்தரூபி (03) நிர்விகாறி (04) குணாதீசர்

10) சைவ மரபில் நிழல் கிரகங்கள் எனப் போற்றப்படும் தெய்வங்கள்
(01) ராகு, சந்திரன் (02) கேது, சூரியன் (03) ராகு, கேது (04) குரு, ராகு

11) நட்சத்திரங்களின் எண்ணிக்கை
(01) 14 (02) 27 (03) 18 (04) 12

12) திருவாதிரை நட்சத்திரத்திற்கு உரிய தெய்வம்.
(01) விஸ்ணு (02) அம்மன் (03) முருகன் (04) சிவன்

13) திருக்கார்த்திகை விளக்கீடு சிறப்பாக நடைபெறும் பஞ்சபூதத் தலங்களில் ஒன்று.
(01) திருவானைக்கா (02) சிதம்பரம் (03) திருவண்ணாமலை (04) திருக்காளத்தி

14) ஆன்மாக்களில் மும்மலங்களை நீக்குவதால் விபுதிக்கு வழங்கும் பெயர்.
(01) பசிதம் (02) ஷாரம் (03) இரட்சை (04) பஸ்மம்


kalvi.lk

15) சிரார்த்தம் என்பது.
(01) இறந்த உடன் செய்யப்படும் கிரியை.
(02) இறந்த ஆத்மசாந்திக்கு 31ம் நாள் செய்யப்படும் கிரியை.
(03) ஆத்மா இறந்த ஒரு வருடத்தின் பின் நிகழ்த்தப்படுவது.
(04) ஒவ்வொரு வருடமும் ஆண்டுத்திவசம் செய்யப்படும்.

16) கிரியைகள் மத ஆசாங்கள் பற்றிக் கூறும் காண்டம்.
(01) ஞானகாண்டம் (02) உபாசனைக்காண்டம் (03) கர்மகாண்டம் (04) யுத்தகாண்டம்

17) காலாத்தால் முந்திய இசை நூல்.
(01) இருக்கு (02) யசுர் (03) சாமம் (04) அதர்வனம்

18) நரகாசுரன் அழிவையும் தேவரும் மனிதரும் அடைந்த சுதந்திரத்தையும் நினைவுகூறும் பண்டிகை.
(01) தைப்பொங்கல் (02) தீபாவளி (03) சித்திரைவருடப்பிறப்பு (04) ஆடிப்பிறப்பு

19) தனக்கு வரும் துன்பங்களை தாங்கிக் கொள்வதும் பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமையுமே தவம் எனக்கூறுபவர்.
(01) அருணகிரிநாதர் (02) தாயுமானவர் (03) விவேகானந்தர் (04) திருவள்ளுவர்

20) ஆணவ வழிபட்டு அறியாமையில் மூழ்கிக் கிடந்த ஆன்மா அதில் இருந்து விடுபட்டு மெய்யறிவு பெற இறைவனால் வழங்கப்படுவது.
(01) மனம், வாக்கு, காயம் (02) தனு, கரண, புவன, போகங்கள்
(03) மெய், வாய், கண், மூக்கு, செவி (04) அறம், பொருள், இன்பம், வீடு

21) செய்க தவம், செய்க தவம் என தன் நெஞ்சை நோக்கி சொல்லுபவர்.
(01) விபுலானந்தர் (02) மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
(03) திருவள்ளுவர் (04) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

22) வசிட்ட மாமுனிவரின் மனைவியான அருந்ததியை வணங்கி இல்லறம் சிறக்க வேண்டும் நிகழ்வு இடம் பெறுவது.
(01) காப்புக் கட்டிய பின்னர்
(02) தாலி கட்டிய பின்னர்
(03) அக்கினியை மூன்று முறை சுற்றிய பின்னர்
(04) கால் விரலில் மெட்டி அணிவித்த பின்னர்

23) உள்பொருள் ஒன்று என்ற கருத்தை புலப்படுத்தும் வேதம்.
(01) சாமம் (02) இருக்கு (03) யசுர் (04) அதர்வனம்

24) தெய்வங்களிடம் இம்மை, மறுமை இன்பங்களை வேண்டுவனவாக அமைபவை.
(01) சங்கிதைகள் (02) பிராமணங்கள் (03) ஆரணியங்கள் (04) உபநிடதங்கள்

25) பிரம்மபுரம் என அழைக்கப்படும் தலம்.
(01) திருமருகல் (02) சீர்காழி (03) திருவாரூர் (04) சிதம்பரம்

26) சங்கரன் என்பதன் பொருள்.
(01) சுகத்தை செய்பவர் (02) முத்தி அளிப்பவர்
(03) சங்குகளை அணிந்தவர் (04) மலங்களை அழிப்பவர்

27) சுந்தரமூர்த்தி நாயனார் மனைவிகளில் ஒருவர்.
(01) மாரி (02) சங்கிலியார் (03) மங்கயர்கரசியார் (04) புனிதவதியார்

28) சுந்தரமூர்த்தி நாயனார் இடக்கண் பார்வை பெற்ற தலம்.
(01) திருவாரூர் (02) திருக்கச்சிஏகம்பம் (03) திருத்துருத்தி (04) திருப்புக்கூர்


kalvi.lk

29) நாவுக்கரசர் நடராஜப் பெருமானின் அருட்கோலத்தை கண்டு உளம் பூரிப்பு அடைந்த தலம்.
(01) திருவாளப்பாடி (02) திருநாவலூர் (03) திருக்காளத்தி (04) சிதம்பரம்

30) திருஞான சம்பந்தருக்கு இறைவன் திருச்செங்காட்டங்குடியில் உள்ள திருக்கோலத்தை காட்டியருளிய தலம்.
(01) திருப்பன்கூர் (02) திருமருகல் (03) பிரம்மபுரம் (04) சிதம்பரம்

31) உற்றுமை சேர்வது…………….. என்ற தேவாரம் பாடப்பட்ட பண்.
(01) பழம்பஞ்சுரம் (02) நட்டராகம் (03) தக்கேசி (04) காந்தாரபஞ்சம்

32) "அந்த நாளன் உன் அடைக்கலம் புகுத…." என தேவாரத்தினை பாடியவர்.
(01) திருநாவுக்கரசர் (02) திருஞானசம்பந்தர் (03) மாணிக்கவாசகர் (04) சுந்தரமூர்த்தி நாயனார்

33) இறைவன் எண்குணங்களைப் பெறும் நிலை.
(01) சொரூபநிலை (02) சச்சிதானந்த நிலை
(03) ஆனந்தமயமான நிலை (04) தடத்த நிலை

34) அக ஆசாரத்தில் அடங்குபவை.
(01) மனதிலே இறைபக்தி, குற்றமற்ற எண்ணங்கள், நல்ல சிந்தனை
(02) நீராடல், சிவசின்னம் தரித்தல், தூய்மையான ஆடை.
(03) தியானம், விபூதி அறிதல், தவம்
(04) சீரிய சிந்தனை, திருமுறை ஓதல், புறச் சுத்தம்

35) இறைவழிபாட்டிற்கு இன்றியமையாதவை
(01) பணம், அன்பு, பூ (02) அன்பு, நீதி, ஒழுக்கம்
(03) பூ, உடல், போக்குவரத்துவசதி (04) அன்பு, நீதி, பணம்

36) வேதம் என்ற சொல்லின் பொருள்.
(01) அறியாமை (02) பேதைமை (03) அறிவு (04) அன்பு

37) ஆன்மாக்களின் இறுதி இலட்சியம்.
(01) பொருள் சேர்த்தல் (02) கூடிவாழ்தல்
(03) ஆன்ம விடுதலை அடைதல் (04) முழுத்துறவு நிலையை அடைதல்

❖ **38, 39, 40 வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையை பயன்படுத்தி விடை தருக.**

| | | |
|---|---|---|
| A. கிருஷ்ணபகவான் | D. ஞானகாண்டம் | G. நரகாசுரன் |
| B. வேதம் | E. தீபாவளி | H. நாம் ஆர்க்கும் குடியல் லோம் |
| C. நாவுக்கரசர் | F. சமண சமயம் | I. உபநிடதம் |

38) ஐப்பசி மாத கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் கொண்டாடப்படுவது.
(01) B, D, F (02) A, E, G (03) A, F, G (04) E, G, H

39) இந்து மதத்தின் இந்து தத்துவங்களின் அடிப்படையுடன் தொடர்புடையவை.
(01) B, D, I (02) A, D, I (03) C, D, I (04) A, E, I

40) மீண்டும் சைவ சமயத்தில் இணைந்த சந்தர்ப்பத்தில்.
(01) A, E, I (02) C, F, H (03) B, E, J (04) C, E, G


kalvi.lk

## பகுதி - II

❖ **1ம், 2ம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக.**

**01)**

1. சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவரைக் குறிப்பிடுக.
2. இறைவன் நிர்விகாரி' என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
3. சைவ நாற்பாதங்கள் எவை?
4. அட்டபுஸ்களில் நான்கு தருக?
5. வாழ்க்கையின் நான்கு படிநிலைகளும் எவை?
6. தட்சினாய காலத்தில் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டு தருக?
7. உற்றுமை சேர்வது மெய்யினையே ………….. என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்.பண் என்பவற்றை தருக?
8. காலக்கணிப்புக்கு உதவும் அலகுகள் எவை?
9. வேதத்திற்கு வழங்கு மறுபெயர்கள் இரண்டு தருக?
10. இந்து சமயத்தின் முதல் நூல் சிறப்பு நூல்களைத் தருக. *(2 x 10 = 20 புள்ளிகள்)*

**02)** பின்வரும் திருமுறைகளில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி அதன் பொருளையும் தருக.

1. அங்கமும் வேதமும்………………………
2. குனித்த புருவமும்………………………….
3. மீளா அடிமை……………………………..
4. நாம் ஆர்க்கும் குடியல்லோம்…………….. *(2 + 03 x 02 = 10 புள்ளிகள்)*

**03) "உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படான்"** (மாணிக்கவாசகர்)

1. கடவுளின் இருநிலைகளையும் குறிப்பிடுக.
2. இறைவனது எண்குணங்களில் ஆறு தருக.
3. பஞ்ச கிருத்தியங்களை குறிப்பிட்டு விளக்குக. *(2 + 03 + 05 = 10 புள்ளிகள்)*

**04) "அரிது அரிது மானிடராதல் அரிது"**

1. ஒப்புரவு என்பதனை விளக்குக.
2. இறைவன் உவர்க்கும் இன்மலர்கள் மூன்றும் எவை?
3. கல்வியுணர்வினை வெளிப்படுத்தும் திருக்குறளைக் குறிப்பிட்டு விளக்குக?

*(2 + 03 + 05 = 10 புள்ளிகள்)*

**05) "மனித வாழ்வை மேம்படுத்துபவை விழுமியங்கள்"**

1. விழுமியப் பண்புகள் நான்கு தருக?
2. அன்புக்கும் அருளுக்கும் இடையிலான வேறுபாடு யாது?
3. வாய்மை என்பதற்கு திருவள்ளுவர் குறிப்பிடும் விளக்கத்தினைக் குறிப்பிட்டு விளக்குக.

*(2 + 03 + 05 = 10 புள்ளிகள்)*

**06) "இறைவனை அடைய துணை புரிபவை சைவசாதனங்கள்"**

1. விரதம் ஆறுமுகநாவலர் தந்த வரைவிலக்கணத்தினை தருக.
2. கந்த சஷ்டி விரதம் அனுஸ்டிக்கப்படும் காலத்தை விளக்குக.
4. விநாயகசஷ்டி விரதம் பற்றி விளக்குக. *(2 + 03 + 05 = 10 புள்ளிகள்)*

**07) "சடங்கள் மனித வாழ்வை நெறிப்படுத்தும்"**

1. கிரியை என்றால் என்ன?
2. கிரியைகளின் வகைகளைக் குறிப்பிட்டு, உதாரணம் தருக.
3. திருமண நிகழ்வுடன் தொடர்புடைய பூர்வாங்க சம்பிரதாயங்களை குறிப்பிட்டு விளக்குக.

*(2 + 03 + 05 = 10 புள்ளிகள்)*


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Kalvi.lk

Whatsapp
**075 287 1457**